# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 04.04.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 2941/SCIC/2022

Thiru T.SURESH REDDY — மேல்முறையீட்டாளர்
S/O. THIMMARAYA REDDY
132/4 DHASARIPALLI VILLAGE
POOAPALLI PANCHAYAT,
HOSUR TALUK-635 114
KRISHNAGIRI DISTRICT

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத் துணை ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம்
ஓசூர், .... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 27/01/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> ***ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 03/08/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 27/11/2023 தேதியிட்டு காலதாமதமாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. எனவே 03/08/2022 தேதியிட்ட மனுவிற்கு எவ்வித தகவல்களையும் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பி.பாலாஜி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓசூர் அவர்கள் மீது ஏன் தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொது தகவல் அலுவலர்/வட்ட துணை ஆய்வாளர்,***

*வட்டாட்சியர் அலுவலகம், ஓசூர் அவர்கள் 19/03/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

**மேற்குறிப்பிட்டவாறு 19/03/2025 அன்று திரு.பா.புவனேஷ், வட்டத்துணை ஆய்வாளர், ஓசூர் வட்டம் அவர்கள் ஆஜராகி திரு.பி.பாலாஜி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓசூர் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

**மேற்சொன்ன திரு.பி.பாலாஜி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஓசூர் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கத்தை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்பொறுப்பில் திரு.பி.பாலாஜி அவர்கள் ஒரு மாத காலமே பணியாற்றி இருக்கிறார் என்பது தெரிய வருகிறது. எனவே, அன்னார் சமர்ப்பித்த காரண விளக்கத்தை ஆணையம் ஏற்று, மேல்நடவடிக்கை கைவிடப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண். CP 2941/SCIC/2022</u>

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத் துணை ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம்,
ஓசூர் வட்டம்

2. திரு.பி.பாலாஜி
முன்னாள் பொது தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஓசூர் வட்டம்

**மனுதாரர்**
Thiru T.SURESH REDDY
S/O. THIMMARAYA REDDY
132/4 DHASARIPALLI VILLAGE
POOAPALLI PANCHAYAT,
HOSUR TALUK-635 114
KRISHNAGIRI DISTRICT

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
**சென்னை**-600 035.

RG/PC